பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 21 (7—10—71) வியாழன் வெளியூர்: புரட்டாசி 22 (8—10—71) வெள்ளி [இதழ்: 95

மதிய உணவுத் திட்டம்

சுகாதாரத்துடன் செயல்பட விதிமுறைகள்

சென்னை, அக். 7—

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டங்கள் சுகாதார அடிப்படையில் இயங்குவதற்கு, இந்திய தர நிர்ணயக் கழகம் (ஐ. எஸ். ஐ), சில சுகாதார விதிமுறைகளை வகுத்துள்ளது.

மத்திய சமையற் கூடங்கள் -- உணவு கொண்டு செல்லும் வண்டிகள் -- பள்ளிகளில் உணவு பரிமாறும் இடம் ஆகிய

(4-ம் பக்கம் பார்க்க)

வி.வி. கிரி--யாகியாகான் சந்திப்பு?

ஈரானில் நடைபெறும் விழாவில் இருவரும் பங்கேற்பு

வங்காள தேசம் பற்றியும் பேச்சு எழலாம்

புதுடில்லி, அக். 7—

பாரசீக ஆட்சி அமைத்து 2,500 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி ஈரானில் நடைபெறவிருக்கும் விழாவில் 58 நாடுகளைச் சேர்ந்த குடியரசுத் தலைவர்கள் கலந்துகொள்கிறார்கள்; இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்களும், பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் யாகியாகானும் இவ் விழாவில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

3 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், இந்தியா -- பாகிஸ்தான் குடியரசுத் தலைவர்கள் நேரில் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும்; ஆயினும், கூடியவரையில் சங்கடமான ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்க்க ஈரான் அரசு கவனமாக இருந்து வருகிறது.

ஒருவரை ஒருவர் மரியாதைக்காகச் சந்திக்கும்போது, ஒருவேளை வங்க தேசப் பிரச்சினை எழுப்பப்பட்டால், குடியரசுத் தலைவருக்கு உதவியாக இருக்கும்பொருட்டு, வெளிநாட்டுத் துறைச் செயலாளர் டி. என். கௌலும் உடன் செல்லுகிறார்.

திரு. வி. வி. கிரியைப் பொறுத்தவரையில், அவராகவே முன்வந்து இப்பிரச்சினையை எழுப்பமாட்டார் என்று தெரிகிறது; ஆனால், யாகியாகான் இப்பிரச்சினையை எழுப்பினால், அதைப் பற்றிப் பேச மறுக்க மாட்டார் என்றும் தெரியவருகிறது.

பாகிஸ்தானுக்கு உதவி நிறுத்தம்

வாஷிங்டன், அக். 7—

பாகிஸ்தானுக்குப் பொருளாதார -- இராணுவ உதவிகளை நிறுத்தி வைப்பதென்று அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழு தீர்மானித்திருக்கிறது.

"கிழக்கு வங்காள நிலைமை சீரடைவதற்கும் -- அகதிகள் தங்கள் தாய்நாடு திரும்புவதற்கும் பாகிஸ்தான் முழுவதுமாக ஒத்துழைக்கிறது என்று அமெரிக்க அதிபர் காங்கிரசு சபைக்குத் தகவல் அனுப்பினால், அந்த நிலைமையில் பாகிஸ்தானுக்கு மீண்டும் உதவியளிக்கத் தொடங்கலாம்" என்றும் ஒரு பிரிவு சேர்க்கப்பட்டிருக்கிறது.

பொது நலனைப் பாதிக்கும் வேலை நிறுத்தம்

நெய்வேலி பொறியர்கள் மீது வழக்குப் பதிவு

நெய்வேலி, அக். 6—

இம்மாதம் 2-ந் தேதி முதல் நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனில் வேலைநிறுத்தம் செய்துவரும் இளநிலை பொறியர்கள்--தொழில் நுட்ப ஊழியர்கள் 419 பேர்மீது போலீசார் வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

தென்னார்க்காடு மாவட்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் அவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

'வேலைநிறுத்தம் சட்ட விரோதமானதாகும்' என்று குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது.

"இந்த வேலைநிறுத்தத்தால் பொதுமக்கள் தொல்லைகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர்; நிலக்கரிச் சுரங்கத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் சுமை

ஐ. நா. பேரவையில் முறையீடு

ஜெனிவா, அக். 7—

"இந்தியாவுக்கு வந்து சேர்ந்துள்ள வங்க தேச அகதிகளின் எண்ணிக்கை 90 இலட்சத்தைத் தாண்டிவிட்டது; இப்போதுள்ள விகிதத்திலேயே அகதிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்தால், இந்த ஆண்டு இறுதிக்குள் அவர்களது தொகை 120 இலட்சமாகப் பெருகிவிடும்"

என்று ஐக்கிய நாடுகள் பேரவையில் இந்தியா தெரிவித்திருக்கிறது

மகனைப் பார்க்க அனுமதி தருக!

புதுடில்லி, அக். 7—

நோயினால் வாடி வரும் வங்கத் தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமானின் தந்தை தமது மகனைப் பார்க்க அனுமதி கோரி அதிபர் யாகியா கானுக்கு தந்தி அனுப்பியிருக்கிறார்.

முஜிபுர் ரகிமானின் தாயார் ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

91 வயதாகும் முஜிபுர் ரகிமானின் தந்தைக்கு கண் அறுவைச் சிகிச்சை நடக்கவிருக்கிறது.

எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை

இரண்டாண்டில் முதலீட்டில் ரூ. 200 கோடி குறைந்தது

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்--- அமைச்சர் சுப்பிரமணியம் தகவல்

புதுடில்லி, அக். 6—

'திட்டமிட்டபடி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெறவில்லை; முதல் இரண்டு ஆண்டுகளில் முதலீடு, எதிர்பார்த்ததை விட சுமார் ரூ. 200 கோடி குறைவு ஆகும்.

"விலைவாசி உயர்வையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் இந்தக் குறைவு மேற்கொண்டு 10 முதல் 15 சதவிகிதம் வரையில் அதிகமாக இருக்கும்.

"இந்தக் குறைவு பெரும்பாலும் மத்தியத் துறையிலேயே ஏற்பட்டிருக்கிறது; அது ஆண்டிற்கு சுமார் ரூ. 400 கோடி இருக்கும்; ஆனால், மாநிலங்கள் நல்ல முறையில் செயல்பட்டிருக்கின்றன; எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், ஆண்டுக்கு ரூ. 200 கோடிதான் குறைவு ஏற்பட்டிருக்கும்.

"நிதி வசதிகள் தொடர்பான நிர்ப்பந்த நிலைமை எதுவும் இதற்குக் காரணம் அல்ல; நிதி வசதிகள் கிடைத்தும் இவ்வாறு ஏற்பட்டிருக்கிறது"

என்றெல்லாம் திட்டத் துறை அமைச்சர் சி. சுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறியிருக்கிறார்.

குடிசைகளைப் பார்க்க ஆசைப்படும் காலம் வரும்

ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பின் சென்னையின் தோற்றமே மாறும்

ஏழைகளின் நல்வாழ்வுக்கு தமிழக அரசு நிறைவேற்றிவரும் திட்டங்கள்--முதல்வர் கலைஞர் கருணாநிதி விளக்கம்

சென்னை, அக். 7—

"இன்னும் ஏழாண்டுக் காலத்தில், 'குடிசைகளே இல்லை -- எல்லாம் கற்கட்டடங்களுடன் -- மின்சார வசதியும் சுகாதார வசதியும் நிறைந்த பகுதிகளாக மாறிவிட்டன; எனும் செய்தியைக் கேட்க ஆவல் கொண்டிருக்கிறோம்' குடிசைகள் எப்படி இருக்கும்' என்று பார்ப்பதற்கு ஆசை கொள்ளும் காலம் வரத்தான் போகிறது!

"மின்சார விளக்குகள் உள்ள காலத்தில்கூட, குத்து விளக்குமீதும், லாந்தர் மீதும் ஆசைகொண்டு, மின் விளக்கிலேயே குத்துவிளக்குப் போலவும் -- லாந்தர் கம்பம்போலவும் செய்கிறார்கள்; புதுமையில் பழமையை இணைத்துப் பார்ப்பதில் ஓர் ஆசை!

'மாமல்லபுரத்தில் மத்திய அரசு அமைக்கும் பயணியர் விடுதியில் சுவரும் அறையும் -- மேல் தளமும் எல்லாம் கற்களால் ஆனவை; ஆனால், அதற்கு மேல் ஓலைக் கீற்றைப் போட்டு ஓலைக் குடிசைபோல அமைத்திருக்கிறார்கள்!

'அதுபோல் ஒரு காலத்தில் குடிசைகளே இல்லாமல் போய் -- நாமும் அதுபோல் கற்கட்டடங்களின்மீது ஓலைகளை வேய்ந்து குடிசையைக் கண்டிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை; அதற்காக நாம் வேகமாகப் பணியாற்றிட வேண்டும்.

'குடிசைகள் நிரம்பிய சென்னையைப் பார்த்துவிட்டு, மலேசியா – சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், ஏழெட்டு ஆண்டு கழித்துத் திரும்பிவந்து பார்க்கின்றபோது, 'இது சென்னையா?' என்று கேட்கின்ற அளவுக்கு நமது பணிகள் வேகமாக நடைபெற வேண்டும்"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், சைதைத் தொகுதியில், 'கலைஞர் கருணாநிதி நகர்' புதிய குடியிருப்புக்கள் கட்டுவதற்கான திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கூறினார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

அண்ணா சங்கநாதம்

"அறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சட்டமன்றத்தில் பேசுகையில், 'இந்த அரசு தீட்டும் திட்டங்கள், ஏழை -- நடுத்தர -- பாட்டாளி மக்களின் வாழ்வை வளமாக வைத்துத் தான் தீட்டப்படும்' என்று சங்கநாதம் செய்தார்கள்; அந்தச் சங்கநாதம், இன்னமும் எங்கள் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால்தான், 'நாம் உழைத்தால்தான் ஒருவேளைச் சோற்றுக்கு வழி' என்ற நிலையிலிருக்கும் பாட்டாளிகளுக்காக நமது திட்டங்களைத் தீட்டிவருகிறோம்.

ஏழையின் வாழ்வில் ஏற்றம் ஏற்பட்டதா?

முன்பு தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள், சீமான்களின் வாழ்வை மேலும் சிங்காரமாக்கியதே தவிர, சீரழிந்த ஏழைகளின் வாழ்வைச் சீர்செய்யவில்லை; இதை நாம் கூறவில்லை; அத்திட்டங்களைத் தீட்டியவர்களே -- அவர்களின் வழி வழி வந்தவர்களே, உண்மையை உணர்ந்து வெளிப்படையாகக் கூறினார்கள்.

திட்டங்கள் போடப்பட்டது உண்மை; ஆனால், அதன் பலன் ஏழைக்குப் போய்ச் சேரவில்லை; எரிகின்ற அவன் வயிற்றில் குளிர்ச்சி சேர்க்கவில்லை!

வேகமாகச் செயல்படுவோம்

ஒருபக்கம் நாம் இப்படிக் குடிசை வாழ்வோருக்குக் கட்டடங்கள் [illegible] கட்டிக்கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கம், 'குடிசைகளில் தீ விபத்து' எனும் செய்தியைக் கேள்விப்படுகிறோம்; நேற்று முன்தினம்கூட, பூங்கா நகர்ப் பகுதியில் ஒரு தீ விபத்து பற்றிக் கேள்விப்பட்டு வருந்தினோம்.

ஆகவே, அந்தக் குடிசைப் பகுதிகளை விரைவில் கட்டடப் பகுதிகளாக மாற்ற இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும்; அதற்குப் போதிய நிதி வசதி இல்லை என்றபோதிலும், நம்மால் முடிந்த அளவு செயல்பட்டிருக்கிறோம்."

யாகியா கானைக் குறை சொன்னவருக்கு நேர்ந்த கதி

மூன்று மாதச் சிறைத் தண்டனை பெற்றார் ஓர் அமெரிக்கர்

கராச்சி, அக். 5—
அதிபர் யாகியா கானைக் குறை கூறியதற்காக வெளிநாட்டுக்காரர் ஒருவருக்குப் பாகிஸ்தான் சிறைத் தண்டனை அளித்திருக்கிறது.

அமெரிக்கக் குடிமகனான அவர், இதற்குமுன் இந்தியாவில் அமைதிப் பணிப் படையின் அதிகாரியாக இருந்திருக்கிறார்.

பிறகு, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சில பொருட்களை வாங்கி அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

பாகிஸ்தானில் இருக்கும்போது அவர், பாகிஸ்தானில் விலைவாசி கடுமையாக ஏறிவிட்டிருப்பதாகவும், இதற்கு யாகியா கானே காரணம் என்றும் கூறினாராம்.

இதற்காக அவர் கைது செய்யப்பட்டு — தலைமை இராணுவச் சட்ட நிர்வாகியை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு— இராணுவ நீதிமன்றத்தால் மூன்று மாதக் கடுஞ்சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

டாக்கா முற்றுகை—விடுதலைப் படையின் கொரில்லாத் தாக்குதல்

முஜிப் நகர், அக். 6—
டாக்கா தற்போது முற்றுகை விடப்பட்ட நகராக உள்ளது.

சென்ற மாதம் பிற்பகுதியிலிருந்து சுதந்தரப் படையின் கொரில்லாத் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன.

டாக்கா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சென்ற மாதம் கொரில்லாக்கள் நடத்திய தாக்குதலின் விளைவாக சுமார் 300 பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்தனர்.

டாக்கா மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் டாக்காவுக்கும்—நர்சிண்டிக்கும் இடையே செய்திப் போக்குவரத்தை வங்க தேசக் கொரில்லாக்கள் சீர்குலைத்தனர்; பாஞ்சருகியில் பாலம் ஒன்றைத் தகர்த்தனர்.

ஜினார்டியில் பாகிஸ்தான் இராணுவ முகாம் ஒன்றை விடுதலை வீரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு முகாமிலிருந்துத் துருப்புகளை விரட்டினர்; ஏராளமான சீன ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

தாவூத்கண்டியில் படகுப் போக்குவரத்தையும் கொரில்லாக்கள் சீர்குலைத்தனர்.

டாக்கா—சிட்டகாங் நெடுஞ்சாலை மூலம் இராணுவ சப்ளை வசதியை துண்டித்தனர்.

ஒரே பகுதியில் பெருந்தொழில் குவிவது கூடாது

ஜப்பானை எடுத்துக்காட்டி கவர்னர் ஷா கருத்துரை

கோவை, அக். 6—
சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டியதன் அவசியத்தைத் தமிழ்நாடு கவர்னர் கே. கே. ஷா வற்புறுத்தினார்.

கோவை மாவட்டச் சிறு தொழில்கள் சங்கம் ஏற்பாடு செய்த சிறு தொழில்கள் பொருட்காட்சியை அவர் இங்கு துவக்கி வைத்துப் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"சிறு தொழில்களின் நலனைக் கருதிச் சில பெரிய தொழில்களை மூடக்கூடிய காலம் வரும்.

பொதுத் துறையிலும் சரி—தனியார் துறையிலும் சரி—பெரிய தொழில்கள் பெரும் அளவுக்கு ஒரே இடத்தில் குவியும் நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

ஜப்பானில் பெரும் அளவுக்கு உற்பத்தி பரவலாக்கப்பட்ட துறையிலேயே இருக்கிறது.

சிறு தொழில்களுக்கு லைசென்சு விதி முறைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும்.

தாராள கடன் வசதிகள் இருக்க வேண்டும்; இறக்குமதி பெர்மிட்டுகளும் இத்துறைக்கு தாராளமாகக்கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்."

30 நாடுகளின் மேயர்கள் மாநாடு

சென்னை மேயருக்கு அழைப்பு

சென்னை, அக். 7—
ஹோனலூலுவில் நவம்பரில் நடக்கவிருக்கும் பசிபிக் நகரக் கிளை சங்க மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்னை மேயர் சா. கணேசனும் அழைக்கப்பட்டுள்ளார்.

இச்சங்கம் ஒரு சர்வதேச நிறுவனமாகும்; நகரங்கள் அனைத்தையும் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இந்த நிறுவனம் கவனம் செலுத்துகிறது.

நாட்டிலுள்ள 30 நகரங்களின் மேயர்களும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

'மாநகராட்சியின் சாதனைகள் தொடர தி. மு. கழகத்துக்கு வாக்களிப்பீர்'

சென்னை 19-வது வட்டத்தில் கலைஞர் வேண்டுகோள்—சிண்டிகேடர்கட்கு இடித்துரை

தொண்டர்களை கழகம் மதிப்பதற்கு உதாரணம் கழக வேட்பாளராக காமாட்சி ஜெயராமன்

சென்னை, அக். 5—
"1959-ஆம் ஆண்டில் நாங்கள் மாநகராட்சிப் பொறுப்பேற்ற பிறகும்—1967-ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னரும் சென்னை மாநகரத்திற்குச் செய்துள்ள பணிகளை ஒரு முறை எண்ணிப்பாருங்கள்!

"குடிசைகள் நிரம்பியுள்ள சென்னையில் குடிசைகளை மாற்றுவதற்காகக் குடிசை மாற்று வாரியம் ஒன்று அமைத்து ரூ. 40 கோடி செலவில் திங்கள்தோறும் மாடி வீடுகள் அமைப்பதற்கான பணிகள் செய்யப்படுகின்றன!

"நாறிக் கிடந்த கூவத்தை நறுமணமிக்க கூவமாக மாற்றும்வேலை முடிவடைவதை நீங்கள் பார்க்கிறீர்கள்!

"இருண்டு கிடந்த சாலைகள்—சந்து பொந்துகளெல்லாம் ஒளியேறித் ததும்பும் நிலையைக் காண்கிறீர்கள்!

"கனவாக இருந்த காவிரி நீர், சென்னைக் குடிநீராக இன்னும் ஒரிரு ஆண்டுகளில் வந்து சேரவிருக்கிறது; 'இந்தியாவிலேயே 140 மைல் தூரம் குடிநீர் கொண்டுவரும் திட்டம் இது ஒன்றுதான்' என நல்லோர் புகழும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விரைவில் சென்னை நகருக்குக் கிடைக்கவிருக்கிறது!

"இதுபோன்ற நற்பணிகள் மேலும் தொடர, இந்தத் தொகுதியில் காமாட்சி ஜெயராமன் அவர்களுக்கு நல்லாதரவு தர வேண்டுகிறேன்"

என்று, தி. மு. கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள், சென்னை 19-வது வட்டத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தொண்டர்களைக் கழகம் மறக்காது—உரிய நேரத்தில் மதிப்புத் தரும்—என்பதற்கு உதாரணம்தான், இந்தத் தொகுதியில் காமாட்சி ஜெயராமன் நிறுத்தப்பட்டிருப்பது!

'இந்த அம்மையாரை சிண்டிகேட் எதிர்க்கலாமா' என்று இங்கு பேசிய இலட்சுமிகாந்தன் கேட்டார்.

'எதை எதிர்ப்பது—எதை ஆதரிப்பது' எனத் தெரிந்திருந்தால் இந்த நிலை சிண்டிகேட்டிற்கு வந்திருக்குமா?

'தி. மு. கழக அரசுக்கு எதிரானதா—உடனே அதை ஆதரிப்பது' எனும் போக்கில்தான் சிண்டிகேட் சென்று கொண்டிருக்கிறது!

நீலகிரியில் கூடலூர் எனும் பகுதியில், மலையாளிகளை வெளியேற்றுவதாகச் சில அரசியல் விரோதிகள் புகார்களைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக அரசுக்கு, 'தமிழர்கள்—மலையாளிகள்' என்ற பாகுபாடு இல்லை—தமிழ்நாட்டில் இருப்போர் அனைவரும் தமிழரே!

ஆனால் திருச்சியில் கூடிய காமராசரின் காங்கிரசுக் கட்சி, 'கூடலூரில் தி. மு. கழக அரசு, மலையாளிகள்—தமிழர்கள் எனும் வேறுபாட்டைக் காட்டுகிறது; மலையாளிகளை வெளியேற்றக் கூடாது' என்று தீர்மானம் போட்டிருக்கிறது.

கூடலூரை மலையாளத்துடன் சேர்த்துவிடு' என்று கேட்டுக் கொண்டிருக்கும் வேலையில், அவர்களுக்கு அடி எடுத்துக் கொடுப்பதுபோல் சிண்டிகேட் போடுவது சரியா?

காங்கிரசுப் பத்திரிகைகள் வேறு அதனைப் பக்கம் பக்கமாக பிரசுரிக்கின்றன!

இப்படி, 'எதை ஆதரிப்பது—எதை எதிர்ப்பது' என்று தெரியாத போக்கிலேயே அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள்!

அதனால்தான், இங்கே மறைந்த தொண்டரின் துணைவியாருக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்தியிருக்கிறார்கள்!

'அப்படி ஏன் நிறுத்தினீர்கள்' என்று நான் கேட்கப் போவதில்லை; 'சனநாயகக் கடமையின் காரணமாக நிறுத்தியிருக்கிறார்கள்' என்று அதை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் இந்த சனநாயகக் கடமை கிருஷ்ணகிரியில் எங்கே போயிற்று?—இதற்குப் பதில் சொன்னால் போதும்!"

அரபியக் கூட்டமைப்பு

தலைவராக சதாத் தேர்வு

கெய்ரோ, அக். 6—
புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் அரபுக் கூட்டமைப்புக்கு முதல் தலைவராக எகிப்துக் குடியரசுத் தலைவர் அன்வர் சதாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எகிப்து—லிபியா—சிரியா ஆகிய நாடுகளைக் கொண்டதாகும் இந்த அமைப்பு.

இதன் தலைவர் பதவி இந்நாடுகளின் தலைவர்களிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறி மாறி வரும்.

மின் வாரியத்தை நம்பி நெய்வேலி

மின்சார உற்பத்தி நின்றதன் எதிரொலி

தமிழ்நாட்டுக்குத் தட்டின்றி மின்சாரம் கிடைக்கும்

சென்னை, அக். 6—
"வேலை நிறுத்தம் காரணமாக நெய்வேலியில் மின்சார உற்பத்தி தடைப்பட்டிருப்பதால், மின்சார விநியோகம் குறித்துக் கவலைப்பட வேண்டிய நிலைமை ஏதும் இல்லை" என்று மின் வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்வாரியத் தலைமைப் பொறியர் தலைமையில் உயர்தர அதிகாரிகள் கூட்டம் ஒன்று கூடி நிலைமையைப் பரிசீலித்தது.

நெய்வேலி மின்சார வரத்து நின்று விட்டாலும், அந்த இழப்பு, நீர் மின்சார உற்பத்தி நிலையங்கள்மூலம் ஈடுசெய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையங்களில் தண்ணீர் இருப்பு நிலைமையும் திருப்திகரமாக இருந்துவருகிறது. மேலும், எண்ணூர் அனல் மின்சாரமும் கிடைத்துவருகிறது. இதுவன்றி, கேரளத்திலிருந்தும், மைசூரிலிருந்தும் தேவையான மின்சாரம் கிடைக்கும் என்றும் அதிகாரி தெரிவித்தார்.

நெய்வேலியில் வேலை நிறுத்தம் இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. வேலை நிறுத்தம் உடனடியாக முடிவுறுவதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதுவரையில், மின் வாரியத்துக்கு மின்சாரத்தை அனுப்பிக்கொண்டிருந்த நெய்வேலி இப்போது தனது தேவைக்கு, மின்வாரியத்தை எதிர்நோக்கி நிற்கிறது.

ரோல்ஸ்ராய்ஸ் நிறுவனம் கலைக்கப்படுகிறது

இலண்டன், அக். 6—
உலகப் புகழ்பெற்ற ரோல்ஸ் ராய்ஸ் எஞ்சின் உற்பத்தி நிறுவனத்தைக் கலைத்துவிடுவது என்று, அதன் பங்குதாரர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நிறுவனம் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஊழலில் ஈடுபட்ட கெசட் பதிவு அதிகாரிகள்

மத்திய புலன் விசாரணைக் குழு கண்டுபிடிப்பு

புதுடில்லி, அக். 7—
மத்திய புலன் விசாரணைப் பிரிவின் சென்னைக் கிளை, ஜூன்—ஜூலை—ஆகஸ்டு மாதங்களில் 65 குற்ற வழக்குகளைப் புலன் விசாரணை செய்தது.

பரிசீலனைக் காலத்தில் விசாரிக்கப்பட்ட வழக்குகளில், 13 வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த 2 கெசட் பதிவு பெற்ற அதிகாரிகள்—8 கெசட் பதிவு பெறாத அதிகாரிகள்—17 தனிப்பட்டவர்கள்—2 தனியார் நிறுவனங்கள் ஆகியோர் வழக்கு விசாரணை சம்பந்தமாக நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

பரிசீலனைக் காலத்தில் 4 வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த ஒரு கெசட் பதிவு அதிகாரி—ஒரு கெசட் பதிவு பெறாத அதிகாரி—மூன்று தனியார்கள்—இரண்டு தனியார் நிறுவனங்கள் ஆகியோருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

37 வழக்குகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள், முறையான இலாகா விசாரணைக்கு அனுப்பப்பட்டனர்.

பரிசீலனைக் காலத்தில் 30 வழக்குகளை, சம்பந்தப்பட்ட துறைகள் முடிவு செய்தன; இவற்றில் இரண்டு கெசட் அதிகாரிகளும்—19 கெசட் பதிவு பெறாத அதிகாரிகளும்—4 தனியாரும், மூன்று தனியார் நிறுவனங்களும் துறைகளில் தண்டிக்கப்பட்டன.

கோவில் நிதியிலிருந்து சித்த மருத்துவமனைகள்

35 இடங்களில் துவக்க அரசு அனுமதி

சென்னை, அக். 6—
தமிழ்நாட்டில் கோயில்கள் ஆதரவில் மேலும் 35 சித்த மருத்துவ மனைகள் அமைத்து நடத்துவதற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது; ஏறகனவே தஞ்சை மாவட்டத்தில் அத்தகைய 12 மருத்துவமனைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விவரங்களை சென்னை—சேப்பாக்கம் அரசு அலுவலகக் கட்டடத்தில் நடைபெற்ற அரசு சித்த மருந்தகத் திறப்பு விழாவில் பேசிய தமிழக அரசு இந்திய மருத்துவ இயக்குநர் டாக்டர் எஸ். ஏ. சுபான் வெளியிட்டார்.

திருநெல்வேலியில் 100 ஏக்கர் பரப்பில் மூலிகைப் பண்ணை ஒன்றையும், கீழ்ப்பாக்கத்தில் சித்த வைத்திய ஆய்வுக்கூடம் ஒன்றையும் அமைப்பது குறித்து மாநில அரசு ஆலோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மருந்தகத்தை சுகாதார அமைச்சர் க. அன்பழகன் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழ்நாட்டுக்குச் சொந்தமான மருத்துவ முறையாகும்—சித்த மருத்துவ முறை; எனவே, அந்த முறைக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஆதரித்து வருகிறது; மற்ற மாநிலங்கள் அந்த அளவுக்கு ஆதரவு கொடுக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை.

"மக்கள்மீது சித்த மருத்துவ முறையைத் திணிக்க வேண்டுமென்கிற எண்ணம் அரசுக்கு இல்லை.

சுகாதாரத் துறைச் செயலாளர் ஜே. அம்பாசங்கர் வரவேற்புரை ஆற்றுகையில், 'ஐந்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஏற்கனவே திறக்கப்பட்டிருக்கும் சித்த மருத்துவப் பிரிவுகள், பொதுமக்களிடம் பிரபலமாகிக்கொண்டு வருகிறது' என்றார்.

ஐ. நா. கூட்டத்தில் திருமதி பண்டாரநாயகா

கொழும்பு, அக். 5—
இலங்கைத் தலைமையமைச்சர் திருமதி பண்டாரநாயகா, நடைபெற்றுவரும் ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வார் என்று தெரியவருகிறது.

இது அதிகாரபூர்வமாக இன்னமும் அறிவிக்கப்படவில்லையெனினும், இவ்வார இறுதியில் அவர் நியூயார்க் செல்வார் என்று கூறப்படுகிறது.

திருமதி பண்டாரநாயகா இப்போதுதான் முதல் தடவையாக ஐ. நா.-வுக்குச் செல்கிறார்.

அவரது கணவரான முன்னாள் தலைமையமைச்சர் பண்டாரநாயகா, 1956-ல் ஐ. நா.-வில் பேசியிருக்கிறார்.

இப்போது திருமதி பண்டாரநாயகா ஐ. நா. கூட்டத்தில் கலந்துகொண்டால், கணவனும்—மனைவியும் ஐ. நா.-வில் கலந்துகொண்ட முதல் பெருமையைப் பெறுகின்றனர்.

புத்தப் பிட்சுகளின் நடவடிக்கை

கண்காணிக்க இலங்கை அரசு முடிவு

அடையாளக் கார்டுகள் வழங்குவதற்கும் ஏற்பாடு

கொழும்பு, அக். 5—
இலங்கையில் உள்ள புத்தப் பிட்சுகளுக்கு அடையாளக் கார்டுகள் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதுவரையில் இவர்களைக் கண்காணிக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இனிமேல் இவர்களைப் பதிவு செய்து—இவர்களின் நடவடிக்கைகளை ஆராய முடிவு செய்யப்பட்டிருக்கிறது,

இலங்கையில் 20,000 முதல் 30,000 புத்தப் பிட்சுகள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்தியாவிலிருந்து 200 பஸ்கள்

இறக்குமதி செய்ய இலங்கை முடிவாம்

கொழும்பு, அக். 6—
இலங்கைப் போக்குவரத்து நிறுவனத்துக்கு உடனடியாக 200 பஸ்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் அசோக் லேலண்டு, டாட்டா நிறுவனங்களிலிருந்து இவைகள் இறக்குமதி செய்யப்படும்.

இரஷ்யாவுக்கு 40 கோடி சிகரெட்டு

இந்தியக் கம்பெனியின் சாதனை

சென்னை, அக். 6—
கோல்டன் டுபாக்கோ கம்பெனியார் சோவியத் இரஷ்யாவுக்கு 40 கோடி பனாமா சிகரெட்டுகளை ஏற்றுமதி செய்திருக்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட ரக சிகரெட் இவ்வளவு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்த ஆர்டர் முழுவதும் ஏழே மாதங்களில் செய்து முடிக்கப்பட்டது.

கோல்டன் டுபாக்கோ கம்பெனி முற்றிலும் இந்தியர்களுக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கட்கு போனசாக ரூ. 1.50 கோடி

45,000 பேர் பெறுவார்கள்

கோவை, அக். 7—
கோவை மாவட்டத்தில் 49 பஞ்சாலைகளைச் சேர்ந்த 45,000 தொழிலாளர்கள் ரூ. 1.50 கோடி போனசாகப் பெறுவர்.

இது சம்பந்தமாக, தென்னிந்திய ஆலை முதலாளிகள் சங்கத்துக்கும்—இ.தே.தொ.ச. காங்கிரசு, இந்து மஸ்தூர் சங்கம், தி.மு.க.—சுதந்தராக் கட்சிகளின் கீழுள்ள தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி பத்து ஆலைகள் நான்கு சதவிகிதமும், ஒன்பது ஆலைகள் நான்கு சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதம் வரையிலும் போனசு கொடுக்கும்.

இந்த 19 ஆலைகளும் முதலில் 8 சதவிகிதம் கொடுத்துவிட்டு, அதிகப்படியாகக் கொடுத்த தொகைகளைப் பின்னர் பிடித்துக் கொள்ளும்.

30 ஆலைகள் பத்து சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதம் வரை கொடுக்கும்; அவற்றில் ஏழு ஆலைகள் அதிகபட்ச போனசான 20 சதவிகிதம் அளிக்கும்.

20 சதவிகிதம் போனசு கொடுக்கும் ஆலைகள் வருமாறு:—

பிரீமியர் இராமகிருஷ்ணா; எஸ்ஸார்பி; பழனி ஆண்டவர் ஆலை; கோபாலகிருஷ்ணா; வெங்கடேசா ஆலை; இராணி லட்சுமி ஆலை.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஆதிக்கத்தின் கீழுள்ள சங்கங்கள் இன்றைய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவில்லை.

தேவையற்ற வேலைநிறுத்தம்

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை கண்டனம்

சென்னை, அக். 6—
தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறிவிப்பதாவது:—

"கோவை மாவட்டத்திலுள்ள பஞ்சாலைகளில் இந்த ஆண்டுக்குரிய போனஸ் பற்றிக் கடந்த ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது; அதன்படி கணக்கிடப்பட்டுப் போனசுத் தரப்பட இருக்கின்ற நிலையில், சில சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்த வேலைநிறுத்தம் தேவையற்றது மட்டுமல்ல—தொழிலாளர்கட்கு எவ்விதத்திலும் நன்மை பயக்கப்போவதில்லை.

குறைந்தபட்ச போனசு விகிதத்தை உயர்த்த வேண்டுமென்பது பற்றி முத்தரப்பு மாநாட்டு வாயிலாகவும், மத்திய அரசு மூலமாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலைமையில், வேலைநிறுத்தம் அவசியமற்றதாகிறது.

அகில இந்திய அடிப்படையில் எல்லாத் துறைத் தொழிலாளர்களும் ஒன்றுபட்டு வலியுறுத்திச் சொல்வது அல்லாமல், தற்போதைக்குத் தனியாகக் கோவை மாவட்டப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது அவசியமற்றதாகும்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் தொடர்பான முன்னேற்றச் சங்கத் தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் பங்கு பெறமாட்டார்கள்; ஏனைய தொழிலாளர்களும் அவசியமும் அவசரமுமற்றதும், தொழிலாளர்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதுமான இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்."

உ. பி. மாநிலத் தொழில் வளர்ச்சி

மத்திய அரசு காட்டும் அக்கறை

லக்னோ, அக். 6—
உத்தரப் பிரதேசத்தில் பல தொழிற்சாலைகளையும் அமைக்க துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

உ. பி. மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனத்துக்கு ரூ. 4.19 கோடி முதலீட்டில் ஸ்கூட்டர் தொழிற்சாலை ஒன்று அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கிவிட்டதாம்.

ஆண்டொன்றுக்கு 50,000 ஸ்கூட்டர்களை உற்பத்தி செய்யக்கூடிய இத்தொழிற்சாலையில் 1,200 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

மேலும் ரூ. 6.10 கோடி முதலீட்டில் உருக்கு உருண்டை தயாரிக்கும் ஆலை ஒன்று ஏற்படுத்தவும், ரூ. 7.50 கோடி முதலீட்டில் பிளேடுத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுவிட்டிருக்கிறது.

எண்ணெய்த் தொழிற்சாலை

உத்தரப் பிரதேசத்தில் விரைவிலேயே ஒரு எண்ணெய்த் துப்புரவு ஆலை ஏற்படுத்தப்போவது உறுதியாகிவிட்டது.

இத்தகவலைத் தெரிவித்த மத்திய தொழில் வளர்ச்சித் துறைத் துணை அமைச்சர், 'விரைவில் இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்படும்' என்று கூறினார்.

ஆராய்ச்சித் துறையில் இளைஞர்களை ஊக்குவிக்கத் திட்டம்

நடப்பு ஆண்டுமுதல் தமிழக அரசு துவக்குகிறது

சென்னை, அக். 7—
படித்த இளைஞர்கள் முனைப்பாக ஆராய்ச்சியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

பொருளாதார இயல்—புள்ளிவிவரத் துறை ஆகியவற்றில் பட்ட மேற்படிப்புப் பயின்ற இளைஞர்கள் இத்திட்டத்தின் வாயிலாகப் பயனடைவார்கள்.

நடப்பு ஆண்டிலிருந்து செயல்படவிருக்கும் இத்திட்டத்தின் கீழ் 15 இளம் ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஆராய்ச்சிக்கு மேற்கொள்ளவேண்டிய தலைப்புக்களை அரசு தேர்ந்தெடுத்து அறிவிக்கும்: ஒவ்வொரு ஆராய்ச்சியாளரும் அவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பினை மேற்கொண்டு, தாம் விரும்பும் பல்கலைக் கழகம் அல்லது பட்ட மேற்படிப்புக்கு வசதி உள்ள கல்லூரி ஒன்றுடன் இணைந்து ஆராய்ச்சியைத் தொடங்கலாம்.

அங்குள்ள பேராசிரியர்கள், இவர்கள் ஆராய்ச்சியில் முனைப்பாக இருந்து ஊக்குவிப்பார்கள்.

ஆராய்ச்சித் துறையில் பயிற்சிபெறத் திறமைவாய்ந்த இளைஞர்களுக்கு இத்திட்டத்தின்மூலம் ஒரு நல்ல வாய்ப்புக் கிட்டும்.

வேளாண்மை, தொழில், நிதி, வரி அமைப்பு, வேலை வாய்ப்பு, வணிகம் போன்ற பல்வேறு துறைகளில் எதிர்நோக்கியிருக்கும் பல பிரச்சினைகளை அணுகுவதற்கும்—களைவதற்கும் கல்விக்கூடங்களில் நடைபெறும் இந்த ஆராய்ச்சிகள் பயன்படக்கூடியதாக இருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 250 ஓராண்டுக் காலத்திற்கு அரசு உதவிப் பணம் அளிக்கும்; அவசியம் என்று தோன்றினால், இச்சலுகை ஓராண்டுக் காலத்திற்கு மேலும் நீடிக்கப்படலாம்.

இத்துடன், ஆராய்ச்சி சம்பந்தமான மற்றச் செலவுகளுக்காகவும் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை மானியமாகவும் அளிக்கப்படும்.

கல்கத்தாவில் அண்ணா பிறந்த நாள்

அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கச் சார்பில் நடைபெற்ற சிறப்புமிக்க நிகழ்ச்சிகள்

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 63-வது பிறந்த நாள் விழா, கல்கத்தாவில் இயங்கிவரும் அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கச் சார்பில் செப். 15 காலை 9 மணியளவில், சங்கம் நடத்தி வரும் 'அறிஞர் அண்ணா—நேத்தாஜி—முத்துராமலிங்கத் தேவர் தமிழ் இலவசப் பள்ளி'க் கட்டடத்தில் நடைபெற்றது.

அதுபோது, கல்கத்தா மேயரைத் தலைவராகக்கொண்டு, தமிழ்ப் பள்ளிக் கட்டட நிதிக் குழு அமைக்கப்பட்டது; பள்ளிக் கட்டடத்திற்கு, 'டாக்டர் கலைஞர் கருணாநிதி இல்லம்' எனப் பெயர் வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மத்திய கல்கத்தாவில் உள்ள ஒரு தெருவிற்கு 'டாக்டர் சி. என். அண்ணாதுரை தெரு' எனப் பெயர் வைக்குமாறு கல்கத்தா மாநகராட்சியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவர் திருப்பத்தூர் செ. வீரபத்திரன் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

தற்போது வாடகைக் கட்டிடத்தில் நடந்துவரும் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் ஒன்று வாங்க கல்கத்தா மேயர் திரு. ஷியாம் சுந்தர் குப்தா அவர்களைத் தலைவராகக் கொண்ட 'தமிழ்ப் பள்ளிக் கட்டட நிதிக் குழு' ஒன்று சங்கச் சார்பில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், பள்ளிக் கட்டடத்திற்கு 'டாக்டர் கலைஞர் கருணாநிதி இல்லம்' என்று பெயரிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

"இந்திய இலக்கியம்—மொழி வளர்ச்சிக்கு மறைந்த அண்ணா அவர்கள் ஆற்றிய தொண்டினைப் பாராட்டும் வகையில், கல்கத்தாவில் வாழ்ந்துவரும்—பெரும்பான்மையான தென்னிந்தியர்கள் பணியாற்றிவரும் மத்திய கல்கத்தா பகுதியில் உள்ள ஒரு தெருவிற்கு, 'டாக்டர் சி. என். அண்ணாதுரை தெரு' என்று பெயர் வைக்கும்படி கல்கத்தா மாநகராட்சி கேட்டுக்கொள்கிறது" என்ற தீர்மானத்தைச் சங்கச் சார்பில் அவர் முன்மொழிந்தவுடன், கூடியிருந்தோர் ஆரவாரப் பேரொலிக்கிடையே நிறைவேறியது.

திரு. வீரபத்திரன் மேலும் பேசுகையில், மாதம் ஏறத்தாழ ஆயிரம் ரூபாய் செலவாகும் இப்பள்ளி தொடர்ந்து இங்கு நடத்தப்படத் தமிழக முதலமைச்சர் தனி ஆர்வமும்—அக்கறையும் கொண்டு நிதியுதவி செய்தால்தான் நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

'டாக்டர் கலைஞர் கருணாநிதி தமிழ் மலர்' 1972 மார்ச் திங்களில் வெளியிடப்படும் என்றும், சங்கம் நடத்திவரும் அனைத்து நாட்டுக் கவிதை—கட்டுரைப் போட்டிக்குக் கவிதை—கட்டுரைகளைப் பெற்றுக் கொள்ளும் நாள் ஆகஸ்டு 30-லிருந்து டிசம்பர் 15-ம் நாளுக்குத் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்றும் அறிவித்தார்.

சங்கப் பள்ளியில் நடைபெற்ற முக்கால் ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ—மாணவிகளுக்கு 'டாக்டர் கலைஞர் கருணாநிதி பரிசு' விழாவின்போது அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு தவிர, பிற மாநிலத்தில், இலவச மதிய உணவு—இலவசச் சீருடை—புத்தகம், சிலேட்டு, நோட்டு, மற்றும் எழுது பொருட்களும் இலவசமாக அளித்து நடத்தப்படும் ஒரே தமிழ்ப் பள்ளி, கல்கத்தாவில் சங்கம் நடத்திவரும் இப்பள்ளிதான் என்பது குறிப்பிடத்தக்கது; கல்கத்தாவில் நடந்துவரும் ஒரே தமிழ் இலவசப் பள்ளியும் இப்பள்ளிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

பள்ளிக் கட்டட நிதிக் குழு உறுப்பினர் திரு. காதர் ஷம்சுதீன் விழாவினைத் துவக்கிவைத்து உரையாற்றினார்: பள்ளிக்கு ரூ. 300 பெறுமான மின்சார விசிறி ஒன்றினை நன்கொடையாக வழங்கினார்.

சங்கச் செயலாளர் திரு. நி. மாறன் அனைவரையும் வரவேற்று உரையாற்றுகையில், அடுத்த ஆண்டு முதல் அண்ணா பிறந்த நாள் விழாவின்போது பட்டி மன்றமும்—கவியரங்கமும் நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும், இதில் பெறுபவர்களுக்கு 'டாக்டர் கலைஞர் கருணாநிதி கேடயம்'—'டாக்டர் கலைஞர் கருணாநிதி பதக்கம்' வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

கல்கத்தாவில், தமிழக மகளிருக்கென்று தனி அமைப்பு இதுவரையில் ஏதுமில்லை; ஆகவே, கல்கத்தாவாழ் தமிழ் மகளிர் நலன்களுக்காகத் தமிழக முதல்வரின் அன்னையாரின் நினைவாக 'அஞ்சுகம் அம்மாள் மகளிர் மன்றம்' இம்மாத இறுதியில் துவக்கப்பட உள்ளது என்றும் தெரிவித்தார்.

சங்கப் பொருளாளர் திரு. கே. சி. தாஸ் (வங்காளி) நன்றி நவின்றார்.

விழாவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

பெரியார் பிறந்த நாள் விழா

அஞ்சுகம் மகளிர் பகுதி துவக்கம்

கல்கத்தா அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 17—9—71 காலை 10-மணியளவில், தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு, சங்கத் தலைவர் செ. வீரபத்திரன் தலைமை தாங்க, தந்தை பெரியார் அவர்கள் சமுதாய மறுமலர்ச்சிக்கு ஆற்றிவருகின்ற தொண்டினைச் சிறப்பித்துப் பேசினார்; கல்கத்தாவில் வாழ்ந்துவரும் ஏழைத் தமிழர்களின் குழந்தைகள் இலவசமாகத் தங்கள் தாய்மொழியில் கல்வி கற்பதற்குச் சங்கச் சார்பில் நடத்தப்பட்டுவரும் இலவசத் தமிழ்ப் பள்ளிக்குப் பெரியார் அவர்கள் உடனடியாக நிதி உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மத்திய கல்கத்தாவில் வாழும் தமிழ்ப் பெண்களின் நலனுக்குப் பணியாற்றும் வகையில், சங்கச் சார்பில் பெண்கள் பகுதி ஒன்றினை—'அஞ்சுகம் மகளிர்ப் பகுதி' யினைத் துவக்கிவைத்தார்; கல்கத்தா எம். ஜி. ஆர். ரசிகர் மன்றப் பொதுச்செயலாளர் செல்வி ஆ. முனியம்மாள், இதன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

விழாவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

செயலாளர் நி. மாறன் நன்றியுரை ஆற்றினார்.

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்

நிர்வாகிகள் தேர்வு

கல்கத்தா எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் முதல் பொதுக் குழுக் கூட்டம், செப். 22-ல் நடைபெற்றது.

மன்ற நிறுவனர் திருப்பத்தூர் செ. வீரபத்திரன் தலைமைவகித்தார்.

மன்றத் தலைவராக எப். மகமூத்தும், பொதுச்செயலாளராக செல்வி ஆ. முனியம்மாளும், மற்றும் 5 செயற்குழு உறுப்பினர்களும் 1971—72-ம் ஆண்டிற்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி மறைவுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திடமிருந்து 'டாக்டர்' விருது பெற்ற தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துக்கொண்டது.

சத்யா மூவிஸ் அதிபர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களை கல்கத்தா எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் சிறப்புத் தலைமைக் காப்பாளராகத் தேர்ந்தெடுத்தது.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களின் அன்னையர் சத்யா அம்மாள் நினைவாக மன்றச் சார்பில், ஆண்டுதோறும்—அடுத்த ஆண்டு முதல்—அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று கல்கத்தாவில் 100 ஏழைத் தமிழ்க் குழந்தைகட்கு சீருடை இலவசமாக 'சத்யா சீருடை' எனும் பெயரில் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

கல்கத்தா மாநகரின் ஒவ்வொரு பகுதியிலும்—வங்காள மாநிலம் முழுவதிலும்—எம். ஜி. ஆர். மன்றக் கிளைகளைத் துவக்கும்படி வங்கத்தில் வாழும் எம். ஜி. ஆர். ரசிகப் பெருமக்களைக் கேட்டுக்கொண்டது.

செஞ்சீனா மனங் குளிர்ந்த செய்தி!

சீனாவின் தேசிய நாளையொட்டி, இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியை, பீகிங் வானொலி அப்படியே ஒலிபரப்பியிருக்கிறது.

இந்திராவின் வாழ்த்தை, பீகிங் வானொலி, 'இனிமையான பாராட்டு' என வர்ணித்து ஒலி பரப்பியது!

சென்னை 37-வது வட்டத்தில் தீ விபத்து—துயர் தணிப்புப் பணிகளில் கழகத் தோழர்கள்

சென்னை 37-வது வட்டம் யானைகவுனி காவல் நிலையம் பின்புறம் உள்ள குடிசைப் பகுதியில் 4—10—71-ல் ஏற்பட்ட தீ விபத்தில் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் சேதம் ஏற்பட்டது; உயிர்ச் சேதம் ஏதுமில்லை.

உடனடியாகச் சென்னை மேயர் சா. கணேசன், மற்றும் மாவட்ட கலெக்டரும், போலீசுக் கமிஷனரும், 37-வது வட்ட தி.மு.க. செயலாளர் வி. சானகிராமன், 38-வது வட்டச் செயலாளர் ப. ஆசைமுத்து, 30-வது வட்டச் செயலாளர் எம். ஆர். சந்திரன் ஆகியோரும் வந்து பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும்—இருக்க இடமும் கிடைக்க ஏற்பாடு செய்தனர்.

மாவட்ட அடிப்படையில் திட்டக் குழுக்கள்

துறை வாரியாகப் பணிக் குழுக்கள் அமைக்கப்படும்

மாநிலத்துக்கான நகல் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் வெளியாகும்

சென்னை, அக். 7—

"தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் திட்டக் குழு அமைத்து — அபிவிருத்தி மாவட்டத்தை இலக்காக வைத்துத் திட்டம் வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும்" என்று, நேற்று நடைபெற்ற மாநிலத் திட்டக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முதலமைச்சரும் — மாநிலத் திட்டக் குழுவின் தலைவருமான திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமை வகித்தார்.

அமைச்சர்கள் செ. மாதவன், ம. உ. சண்முகம் ஆகியோரும், திட்டக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிருபர்களிடம் திட்டக் குழுவின் துணைத் தலைவர் எம். ஜி. இராசாராம் விளக்கினார்; 'மாநிலத் திட்டத்தை ஒருங்கிணைத்து வகுத்து நிறைவேற்றுவது என்றும், துறை வாரியாக வளர்ச்சித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது' என்று அவர் சொன்னார்; அவர் மேலும் கூறியதாவது:—

"பல்வேறு துறைகளைப்பற்றி அறியவும் — நீண்டகாலத் திட்டத்தை வகுக்கவும் — புள்ளி விவரங்கள் திரட்டவும் — மாவட்ட அடிப்படையில் திட்டக் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டது; இதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டத் திட்டக் குழு அமைக்கப்படும்; மாவட்டக் கலெக்டர் இந்த மாவட்டத் திட்டக் குழுவின் தலைவராக இருப்பார்.

சென்னை நீங்கலாகத் தமிழகத்தில் மொத்தம் 13 மாவட்டங்கள் உள்ளன; இவற்றில், கன்னியாகுமரி — நீலகிரி — தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் தவிர, மீதமுள்ள பத்து மாவட்டங்களும் ஏற்கனவே வளர்ச்சிப் பணிகளுக்காக ஒவ்வொன்றும் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன; ஆக, தமிழகத்தில் உள்ள மொத்தம் 23 வளர்ச்சி மாவட்டங்களும் இலக்காக வைத்துத் திட்டம் வகுக்கப்படும்; திட்டம் வகுப்பது — நிறைவேற்றுவது ஆகியவை மாவட்டக் கலெக்டரின் அதிகார வரம்புக்கு உட்பட்டு இருக்கும்."

துறை வாரியாகத் திட்டமிட்டு நிறைவேற்றவும் — நீண்ட காலத் திட்டப் பணிகளை வகுக்கவும் 15 துறைகளுக்கு 'பணிக் குழுக்கள்' அமைக்கவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு பணிக் குழுவுக்கும் என்று குறிப்பிட்ட துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பணிக் குழுவும் மாநிலத் திட்டக் குழு உறுப்பினர் ஒருவரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கும்.

பணிக் குழுக்களின் பணிகள் உடனடியாகத் துவக்கப்படும்; அத்துடன், தர்மபுரி — இராமநாதபுரம் மாவட்டங்களின் தொழில் — பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

இதைத் தொடர்ந்து, சேலம்— நெய்வேலி— தூத்துக்குடி— மணலி— கல்பாக்கம் தொழிற் பகுதிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் — இதை மேலும் வளர்ச்சி செய்வதற்கான திட்டங்கள் குறித்தும் ஆராயப்படும்; இந்த வேலை, 6-முதல் 9-மாதக் காலத்திற்குள் முடிவு பெறும்.

"மாநிலத் திட்டக் குழு இந்த ஆண்டு இறுதிக்குள் நகல் திட்டம் ஒன்றை வெளியிடும்" என்றும் திரு. இராசாராம் கூறினார்.

உதவிப் பதிவாளர் அலுவலகத் திறப்பு

அம்பத்தூர் உதவிப் பதிவாளர் அலுவலகத் திறப்பு விழா 8-10-71 மாலை 5-மணிக்கு திரு. கே. ஜே. சோமசுந்தரம் ஐ. ஏ. எஸ். தலைமையில் நடைபெறும்; பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் அலுவலகத்தைத் திறந்துவைப்பார்; சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன், வேளாண்மை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் விழாவில் பங்கு கொள்வர்.

குடிசை மாற்று வாரிய அடிக்கல் நாட்டு விழா

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் புதுக்குடியிருப்பு அடிக்கல் நாட்டு விழா 9—10—71 மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி லாக் நகர்ப் பகுதியில், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையிலும் — முரசொலி மாறன் எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்; முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டுவார்; வரவேற்புரை: இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.

தேசிய ஒருமைப்பாட்டு நாள்

தலைமைச் செயலகத்தில் உறுதிமொழி ஏற்பு

முதல்வர் மற்றும் அமைச்சர்கள் — அதிகாரிகள் பங்கேற்பு

சென்னை, அக். 7—

நேற்று காலை 1-மணியளவில், கோட்டை அணிவகுப்பு மைதானத்தில், தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் தேசிய ஒருமைப்பாடு நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

அமைச்சர்கள் என். வி. நடராசன், ம. உ. சண்முகம், சத்தியவாணிமுத்து, செ. மாதவன், ஓ. பி. இராமன், அன்பில் தர்மலிங்கம், மு. கண்ணப்பன், க. இராசாராம், மற்றும் தலைமைச் செயலாளர் சபாநாயகம், காவல் துறைத் தலைமை அதிகாரிகள், அரசுத் துறை உயர் அதிகாரிகள், அலுவலர்கள், அரசு ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

முதல்வர் படித்த ஒருமைப்பாடு உறுதிமொழி வருமாறு:—

"நாட்டின் உரிமை வாழ்வையும் —ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்த செயல்படுவேன் என்று நான் உளமார உறுதி கூறுகிறேன்; 'ஒருபோதும் வன்முறையைநாடேன்' என்றும், சமயம் — மொழி — வட்டாரம் ஆகியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல்— பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும், அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் உறுதியளிக்கிறேன்"

மேற்கண்ட உறுதிமொழியை முதல்வர் படிக்க—அதனைப் பின் தொடர்ந்து அனைவரும் திருப்பிக் கூறினர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

அக். 8 மாலை 4 மணி: காஞ்சி— போக்குவரத்துப் பணிமனைத் தொழிலாளர்கள் வரவேற்பு; 5 மணி: காஞ்சி வட்டம் புரிசை கிராமம் தி மு. க. கிளை துவக்க விழாவும் — அண்ணா பிறந்த நாள் விழாவும்; இரவு 7-மணி: காஞ்சி வட்டம் கூரம் கிராமத்தில் அண்ணா பிறந்த நாள் விழா; 8 மணி: காஞ்சி வட்ட தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா — ஆற்பாக்கம தி. மு. க. கிளைத துவக்க விழா.

அக். 9 மாலை 4 மணி: அங்குசசெட்டிப்பாளையம் சீரணிப் பள்ளித் திறப்பு; 5 மணி: புலியூர் குழந்தைகள் காப்பகம் திறப்பு; 6 மணி: புலியூர் மின் விளக்கேற்று விழா; இரவு 7 மணி: வடலூர்—பொதுக் கூட்டம்.

அக். 10 காலை 10 மணி: சேலத்தில் நடைபெறும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அலுவலர் நடத்தும் முதல் மாநில மாநாட்டில் கலந்துகொள்ளல்; மாலை 5 மணி: திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெறும் பெரியார் பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ளல்.

நெய்வேலித் தொழிலாளர்கட்குப் போனசு

அமைச்சர் என். வி. நடராசன் முயற்சி வெற்றி

சென்னை, அக். 6—

நெய்வேலி நிலக்கரிக் கார்ப்பரேஷன் நிர்வாகம், அதன் ஊழியர்களுக்கு 5 சதவிகித போனசு அளிக்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

இங்கு நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் நிர்வாகம் அவ்வாறு ஒப்புக்கொண்டதாகத் தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

தொழிலாளர்கள் சார்பில் ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகளும்— முற்போக்குத் தொழிலாளர்கள் சங்கம் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நிலக்கரிக் கார்ப்பரேஷன் தலைவர் கோபால் குமாரமங்கலமும்— தொழிலாளர் நல ஆணையரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இம்மாதம் 11-ந் தேதி போனசுத் தொகை வழங்கப்படும்.

"போனசு சட்டத்தில் கூறியுள்ளபடி 4 சதவிகிதப் போனசு மட்டுமே அளிக்கமுடியும் என்று நிர்வாகம் முதலில் கூறியது; நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சென்ற ஆண்டைப் போலவே 5 சதவிகிதப் போனசு அளிக்க நிர்வாகம் பின்னர் ஒப்புக்கொண்டது; மத்திய தொழிலாளர் நல அமைச்சர் காடில்கர் தெரிவித்துள்ளபடி, குறைந்தபட்சமாக 8.33 சதவிகிதப் போனசு வழங்கப்பட வேண்டுமென்று தொழிலாளர்கள் வற்புறுத்துகின்றனர்; குறைந்தபட்ச போனசு பற்றி மத்திய அமைச்சர் காடில்கர் தமது கருத்தையே தெரிவித்துள்ளார்; மேலும், அதற்கு வேண்டிய சட்டம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறேன்" என்று அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கூறியிருக்கிறார்.

மேலும், தொழிலாளர் நல அமைச்சர்கள் கூட்டமொன்று விரைவில் நடைபெறவிருப்பதாகவும், குறைந்தபட்ச போனசு 8.33 சதவிகிதம் என்று அக்கூட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு—அதற்கான சட்டமும் நிறைவேற்றப்படுமானால், நெய்வேலி நிலக்கரிக் கார்ப்பரேஷனும் 8.33 சதவிகிதப் போனசு அளிக்கும் என்று கூறினார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8—10—71

புரிசை

தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 5 மணிக்கு; தலைவர்: கே. அரங்கநாதன் பி.ஏ.; கொடியேற்றுபவர்: டி. சீனிவாசன்; பேசுவோர்: அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ, கே. டி. எஸ். மணி, கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ, சி. ஆறுமுகம், ஈ. எத்திராசன், வெ. கன்னியப்பன், சா. கிருட்டினன், மற்றும் பலர்.

கூரம்

தி. மு. க. கிளைத் துவக்க விழாவும்—அண்ணா பிறந்த நாள் விழாவும்; மாலை 7-மணிக்கு; தலைவர்: சி. மு. அர்ச்சுனன்; கொடியேற்றுபவர்: டி. சீனிவாசன்; கழகத் திறப்பாளர்: அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்; அண்ணா படத் திறப்பாளர்: சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.; கலைஞர் படத் திறப்பாளர்: கே.டி.எஸ். மணி; பேசுவோர்: கே.எம். இராசகோபால் எம்.எல்.ஏ., சி. ஆறுமுகம், எத்திராசன், கன்னியப்பன், சா. கிருட்டினன், டி.ஏ. கோபால், மற்றும் பலர்.

ஆற்பாக்கம்

காஞ்சி வட்ட தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; இரவு 8 மணிக்கு; தலைவர்: டி. சீனிவாசன்; கொடியேற்றுபவர்: கே.டி.எஸ். மணி; பேசுவோர்: அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., மேயர் சா. கணேசன், கே.எம். இராசகோபால் எம்.எல்.ஏ., ஆர். கோபால், வெ. சம்பந்தம், சி. ஆறுமுகம், எ. எத்திராசன், மற்றும் பலர்.

அறநிலைய அமைச்சர்

எம். கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

அக். 8 காலை 8 மணி: திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலையொட்டிய கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் எழுப்பும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்— கலையரங்க மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டுதல்; 9-மணி: தமிழ்நாடு அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆலோசனைக் குழுக் கூட்டம்; மாலை 5-மணி: வெள்ளாளன் விளை வாலெனலி மன்றத் திறப்பு விழா; இரவு 7-மணி: தட்டார் மடம் அனைத்து கிராம மின்வசதி முழுமை விழா.

'தி. மு. க.—முஸ்லிம் லீக் உறவு முறியாது'

'எதிரிகளின் கனவு சிறிதளவும் பலிக்கப்போவதில்லை'

கோவை, அக். 7—

"தி. மு. கழகத்துக்கும் — முஸ்லிம் லீகுக்கும் இடையே உறவு முறிந்துவிடும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள்; ஆனால் உறவு முறியாது.

"தி.மு. கழகத்துக்கும் — முஸ்லிம் லீகிற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்; அதைப்பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும்; அதற்காக 'உறவை முறித்துக்கொள்வோம்' என்று எவரும் எதிர்பார்க்க வேண்டாம்.

"கலைஞர்கூட இதே கருத்தை, காமராசருக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்; 'காமராசரின் கனவு பலிக்காது' என்று ஒரு கதை மூலம் சிறப்பாக விளக்கியிருக்கிறார்.

"தி.மு.க. பற்றி என் கட்சியில் உள்ளவர்கள் தவறுதலாகப் பேசியிருந்தால் கண்டிப்பேன்; அதுபோல் தி.மு. கழகத்தில் உள்ளவர்களும் பேசியிருந்தால் கண்டிக்க வேண்டும்.

"மதுவிலக்குக் கொள்கையை இந்தியா முழுவதிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம்; தி.மு. கழகமும் இதே கருத்தைத்தான் சொல்கிறது; 'இந்தியா முழுவதும் மதுவிலக்கு செயல்படுத்தப்படுமானால், நாங்களும் செயல்படுத்தத் தயார்' என்று தி.மு. கழகம் கூறியிருக்கிறது.

"மதுவிலக்குப் பற்றிப் பிரச்சாரம் செய்ய ஒரு குழுவையும் தி.மு. கழகம் அமைத்திருக்கிறது; மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்ததில்தான் சில கருத்து மாறுபாடுகள் உள்ளன; அனைத்திந்திய அளவில் இதைச் செயல்படுத்த வேண்டும் என்பதில் இரு கட்சிகளுக்கும் கருத்து ஒற்றுமை இருக்கிறது."

—காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில்

(முஸ்லிம் லீக் சார்பில் கோவையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் தூய்மையும் நிலவ, என்னென்ன நடைமுறைகளைக் கையாள வேண்டும் என்பதுபற்றி இந்திய தர நிர்ணயக் கழகம், இந்த விதிமுறைகளில் குறிப்பிட்டிருக்கிறது.

மதிய உணவுத் திட்டம் சம்பந்தப்பட்ட எல்லா நிறுவனங்களுக்கும், இந்த விதிமுறைகளைத் தர நிர்ணயக் கழகம் அனுப்பியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-16) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.